உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.06.2026 • மலர் 04 • இதழ்: 167 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 16.06.2026 • Vol : 04 • Issue : 167 • Page : 4 • Rs. 5/-

### அமெரிக்கா ஈரான் மோதல்

# முடிவுக்கு வருவதை வரவேற்கிறேன்

## பிரதமர் மோடி பதிவு



புதுடெல்லி, ஜூன் 16
அமெரிக்கா ஈரான் இடையேயான தாக்குதல் சம்பவம் தற்போது அமைதி ஒப்பந்தத்தின் மூலம்முடிவுக்கு வந்துள்ளது. இதனால் ஹார்முஸ் நீரிணை திறக்கப்பட்டுள்ளதால், உலகெங்கிலும் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு சீராகும் நிலை ஏற்பட்டுள்ளது. அமைதி ஒப்பந்தத்துக்கு பல்வேறு நாடுகளும் வரவேற்பு தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், அமெரிக்கா ஈரான் மோதல் போக்கு முடிவுக்கு வருவதை வரவேற்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

மேற்கு ஆசிய மோதலை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் எட்டப்பட்ட புரிந்துணர்வை நான் வரவேற்கிறேன். இந்த மோதல் உலகம் முழுவதும் கடுமையான பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தி, பல நாடுகளில் உயிர் இழப்புகளுக்கும் வழிவகுத்துள்ளது. இந்த அமைதி ஒப்பந்தம், மேற்கு ஆசியாவில் அமைதியைக் கொண்டு வரவும், முக்கிய கடல்வழிப் பாதைகள் வழியாக வர்த்தகம் தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்யவும் உதவும் என இந்தியா நம்புகிறது."

இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

### காவேரி மருத்துவமனையில்

## 2 அதிநவீன 'இதயத்துடிப்பு புலநீக்க' (PFA) சிகிச்சைகள் அறிமுகம்




சென்னை, ஜூன் 16,
சென்னை காவேரி மருத்துவமனை உலகிலேயே மிகவும் மேம்பட்ட இரண்டு இதயத்துடிப்பு புலநீக்க (PFA) சிகிச்சை திட்டங்களை அறிமுகம் செய்தது.

இத்திட்ட அறிமுகத்தின் வழியாக, உலகின் மிக அதிநவீன பி.எஃப்.ஏ தொழில்நுட்பங்களான 'மெட்டிரானிக் பல்ஸ்செலக்ட்' ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனையிலும், 'பயோசென்ஸ் வெப்ஸ்டர் வேரிபல்ஸ்'™ வடபழனி காவேரி மருத்துவமனையிலும் செயல்படுத்தப்படுகின்றன. இந்த தொடக்க விழாவில் அமெரிக்காவில் சேர்ந்த சர்வதேச இதய சிகிச்சை நிபுணர்கள், காவேரி மருத்துவமனை மருத்துவர்கள் குழுவுடன் இணைந்து இந்த பி.எஃப்.ஏ திட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

இதயத் துடிப்பு கோளாறுகளில், குறிப்பாக மிகவும் பொதுவான 'ஏட்ரியல் ஃபைப்ரிலேஷன்' எனப்படும் சீரற்ற இதயத் துடிப்புப் பிரச்சினைக்கு இதயத்துடிப்பு புலநீக்க சிகிச்சை என்பது அடுத்த தலைமுறை அதிநவீன சிகிச்சையாகும். பி.எஃப்.ஏ தொழில்நுட்பமானது துல்லியமாகக் கட்டுப்படுத்தப்பட்ட மின் அலைகளைப் பயன்படுத்துகிறது. இது இதயத் துடிப்பு கோளாறுகளுக்குக் காரணமான செல்களை மட்டும் தேர்ந்தெடுத்து அழிக்கிறது.

மின்னாற்றல் மூலம் சவ்வுகளில் துளை உருவாக்கல் (எலக்ட்ரோபொரேஷன்) என்று அழைக்கப்படும் இந்த புதிய முறை, பாதிக்கப்பட்ட இதயத் திசுக்களை மட்டும் குறிவைத்து குணமாக்குகிறது.

உலகளவில் இதன் பயன்பாடு வேகமாக அதிகரித்து வரும் நிலையில், இதயத் துடிப்பு கோளாறுகளைக் குணப்படுத்துவதில் மிக முக்கியமான அண்மைக்கால கண்டுபிடிப்பாக பி.எஃப்.ஏ (PFA) அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

இதய நோய் சிகிச்சையில் முதுநிலை நிபுணர் டாக்டர் என்.எஸ். சிவகடாட்சம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு காவேரி மருத்துவமனையின் புதிய "ஹார்ட் ரிதம் பேக்கேஜ்" என்ற சிறப்பு பரிசோதனைத் திட்டத்தை தொடங்கிவைத்தார்.

இதய மின்உடலியல் பிரிவு இயக்குநர் டாக்டர் தீப் சந்த் ராஜா தெரிவித்ததாவது: "எங்கள் இரண்டு மையங்களிலும் மூன்று நோயாளிகளுக்கு இந்த புதிய முறையில் வெற்றிகரமாகச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதில் ஒருவர், கடந்த 2 ஆண்டுகளாகத் தொடர்ச்சியான நெஞ்சுப் படபடப்பால் அவதிப்பட்டு வந்த 69 வயதுப் பெண்மணி ஆவார். மருந்துகளால் குணமாகாத அவருக்கு, வலது தொடைப் பகுதி நரம்பு வழியாக வெறும் ஒரு மணி நேரத்திற்குள் இந்த பி .எஃப். ஏ சிகிச்சை செய்யப்பட்டது. மறுநாளே மிகக் குறைந்த மருந்துகளுடன் அவர் வீடு திரும்பினார் என்று தெரிவித்தார்.

காவேரி மருத்துவமனை குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறுகையில்: சர்வதேச அளவில் நிரூபிக்கப்பட்ட நவீன கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, எங்கள் நோயாளிகளுக்கு உலகத்தரத்தில் சிகிச்சையை வழங்குகிறோம். சிகிச்சைகளை எளிதாக்கும், பாதுகாப்பை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களே எங்களின் முதன்மைத் தேர்வாகும். இந்த பி.எஃப். ஏ அறிமுகம் அதற்குச் சிறந்த சான்றாகும்." 'பல்ஸ்செலக்ட்' மற்றும் 'வேரிபல்ஸ்' ஆகிய இரண்டு மேம்பட்ட வசதிகள் மூலம் தமிழ்நாடு, அண்டை மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வரும் நோயாளிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த இதய சிகிச்சை இனி சென்னையிலேயே கிடைக்கும் வகையில் காவேரி மருத்துவமனை முன்னிலை படுத்தி கொண்டிருக்கிறது என்றார்.

## பிரிட்டானியாவின் சத்வம் ப்யூர் பசு நெய்; புதிய தயாரிப்பு அறிமுகம்




சென்னை, ஜூன் 16,
இந்திய இல்லங்களில் மிகவும் நம்பகமான பெயர்களில் ஒன்றாக அறியப்படும் பிரிட்டானியா, மற்றமொரு தயாரிப்பை "பிரிட்டானியா சத்வம் ப்யூர் பசு நெய்யிலும் கொண்டு வந்துள்ளது. பிரிட்டானியா 'சத்வம்' ப்யூர் பசு நெய்யானது ' வீட்டில் தயாரிக்கப்பட்ட நெய் போன்ற அதே தரத்துடன் தயாரிக்கப்படுகிறது. இந்திய இல்லங்களில் நெய் தயாரிக்கும் பாரம்பரிய முறையால் ஈர்க்கப்பட்டு, அதனை அடிப்படையில் நுணுக்கமான உற்பத்தி செயல்முறையை பிரிட்டானியா வடிவமைத்துள்ளது.

"பிரிட்டானியா சத்வம் நெய்யானது உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் தூய்மை, தரம் மற்றும் கட்டுப்பாட்டிற்கான மேம்பட்ட தரநிலைகளை உறுதியாக பின்பற்றுகிறது. 105 டிகிரி செல்சியஸுக்கு மேலான வெப்பநிலையில் தயாரிக்கப்படும் சத்வம் நெய் அதன் தனித்துவமான அசல் நறுமணத்தையும், மிகுந்த சுவையையும் சீராகப் பெறுகிறது.

3000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பிரிட்டானியா செயல்படுத்தி வரும் பசும்பால் கொள்முதல் திட்டமானது நெய்யின் உயர் தரத்தினை உறுதி செய்வதற்கு மேலும் வலுசேர்க்கிறது.

பிரிட்டானியா சத்வம் ப்யூர் பசு நெய் பின்வரும் விலைகளில் சௌகரியமான அளவுகளில் கிடைக்கிறது. 200 மி.லிபேக் ₹250; 500 மி.லி பேக் ₹450: 1 லிட்டர் பேக் ₹830. இந்திய குடும்பங்களின் பல்வேறு தேவைகள் மற்றும் பயன்பாட்டு விருப்பங்களை பூர்த்தி செய்யும் ஒரு சிறந்த, சுத்தமான நெய்யாக பிரிட்டானியா சத்வம் இருக்கும்.

## என்ன செய்து கொண்டிருக்கிறது தவெக அரசின் சிங்கப்பெண்கள் படை?

### சீமான் கேள்வி



சென்னை, ஜூன் 16
நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது பச்சிளம் பெண் குழந்தை வடமாநிலத் தொழிலாளி பிபின் மஞ்சி என்பவனால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு முட்புதரில் வீசப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ள கொடூர நிகழ்வு இதயத்தை நொறுக்குகிறது. பெற்ற குழந்தையைப் பறிகொடுத்து ஈடு செய்ய முடியாத இழப்பால் தவித்து நிற்கும் பெற்றோருக்கு என்ன வார்த்தைகள் கூறினாலும் அவர்களின் மனதவிப்பை ஆற்றிவிட முடியாது. பஞ்சுபோன்ற குழந்தையின் காலில் சிறு முள் குத்தினாலும் தாங்க முடியாத தாய் தந்தையரின் இழைக்கப்பட்ட இப்பெருங்கொடுமையை எப்படிக் கடந்து வாழப்போகிறதோ என்று எண்ணும்போதே நெஞ்சம் பதறுகிறது.

தமிழ்நாடு பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறிதும் பாதுகாப்பற்ற மாநிலமாக உருவெடுத்திருப்பது வேதனையின் உச்சம். என்ன செய்து கொண்டிருக்கிறது தவெக அரசு? தமிழ்நாட்டில் அரசு என்ற ஒன்று இருக்கிறதா? ஆட்சி என்ற ஒன்று நடக்கிறதா? தமிழ்நாடு முழுவதும் மாறுவேடத்தில் செல்லும் முதல்அமைச்சர் தடுத்த குற்றங்கள் எத்தனை? எடுத்த நடவடிக்கைகள் எத்தனை? என்ன செய்துகொண்டிருக்கிறதுதவெகஅரசின்சிங்கப்பெண்கள் படை? இன்னமும் திரைப்பாடலுக்கு இசை வாசித்துக் கொண்டிருக்கிறதா தமிழ்நாடு காவல்துறை?

காவல்துறையைத் தன்னுடைய நேரடிக்கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாடு முதல்அமைச்சர் பெண்கள் பாதுகாப்பிலும், போதைப்பொருள் ஒழிப்பிலும் அலட்சியம் காட்டுவது பேராபத்தானது. அனைத்துச் சமூகக் குற்றங்களுக்கும் காரணமான போதைப்பொருளை ஒழிக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன? வாகனம் ஓட்டி ரீல்ஸ் வெளியிடுவதில் அதீத கவனம் செலுத்தும் தமிழ்நாடு முதல்அமைச்சர், போதைப்பொருளை ஒழிப்பதில் அத்தகைய ஆர்வத்தையும், வேகத்தையும் காட்டுவதில்லையே ஏன்? போதை ஒழிப்பை முதலில் தமிழ்நாடு முதல்அமைச்சர் தன்னுடைய அரசிடமிருந்து தொடங்க வேண்டும். ஊர் முழுக்கப் புதிதாக டாஸ்மாக் பார்களைத் திறந்து வைத்துவிட்டு போதைப்பொருளை ஒழிக்கப்போவதாகத் தவெக அரசு கூறுவது நகைப்புக்குரியது. வெட்கக்கேடானது.

கடந்த திமுக ஆட்சியில் இதேபோன்று கும்மிடிபூண்டியில் 10 வயது சிறுமி பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவனால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டபோதே, அதனை நான் கடுமையாகக் கண்டித்ததோடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பில் அரசு அதீத கவனம் செலுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர்ந்துள்ள வடமாநில தொழிலாளிகள் வருகை மற்றும் இருப்பு குறித்து முறையான ஆவணப்பதிவு அவசியம் என்றும், அவர்களின் கட்டுப்பாடற்ற நடமாட்டம் குறித்துத் தொடர் கண்காணிப்பு இன்றியமையாதது என்றும் வலியுறுத்தியிருந்தேன். ஆனால், அன்றைய திமுக அரசும், இன்றைய தவெக அரசும் வடமாநிலத்தவர் வருகை குறித்து உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயே தற்போதும் வடமாநில தொழிலாளியால் மீண்டும் ஒரு பெண் குழந்தை அநியாயமாக வன்கொடுமைக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளது.

ஏதும் அறியா பெண்குழந்தைகளை வன்கொடுமை செய்யும் ஈவு இரக்கமற்ற கொடூர குற்றவாளிகளுக்கு விரைவான மரண தண்டனை அளிப்பது ஒன்றே, இதுபோன்ற கொடுங்குற்றங்களைத் தடுப்பதற்கு ஒற்றை வழியாகும். அத்தகைய உறுதியும், பெண்கள் மீதான அக்கறையும் இல்லாததாக ஆளுகின்ற அரசுகள் இருக்கும் வரை இதுபோன்ற கொடூர குற்றங்களை ஒழித்திட முடியாது.

ஆகவே, தவெக அரசு இனியாவது வெற்று விளம்பர அரசியல் செய்வதை நிறுத்தி, பெண்களையும், குழந்தைகளையும் பாதுகாக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### குடியாத்தம் செட்டிகுப்பம்

## ப்ளூ ஸ்டார் கபடி குழு நடத்தும் 66 ஆம் ஆண்டு கபடி போட்டி

வேலூர், ஜூன் 16
குடியாத்தம் செட்டிகுப்பம் ப்ளூ ஸ்டார் கபடி குழு நடத்தும் 66 ஆம் ஆண்டு கபடி போட்டி நடைபெற்றது முதல் பரிசு 30 ஆயிரம் மற்றும் கோப்பை இரண்டாம் பரிசு ரூபாய் 20 ஆயிரம் மற்றும் கோப்பை மூன்றாம் பரிசு ரூபாய் 15,000 மற்றும் கோப்பை நான்காம் பரிசு ரூபாய் 10,000 மற்றும் கோப்பை இந்த போட்டியை மாவட்ட அமைச்சர் கபடி கழக சேர்மன் சீவுர்சேட்டுமாவட்டதுணைத்தலைவர்கள் இராசி. தலித் குமார் செ.கு. வெங்கடேசன் பிரபாகரன் ஆறுமுக தாஸ் சர்வதேச நடுவர் கோபாலன் தொடங்கி வைத்தனர்.

இந்தப் போட்டியில் தலைசிறந்த 45 அணிகள் போட்டியிட்டன. இந்த போட்டி பகல் நிலவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் நடுவர்களாக சிவராமன் பாஸ்கர் மோகன் ராஜேஷ் பணியாற்றினர். முதல் பரிசுSRN ப்ளூ ஸ்டார் இரண்டாம் பரிசுVRI கோவை மூன்றாவது பரிசுPK ஸ்போர்ட்ஸ் ஜோலார்பேட்டை நான்காம் பரிசு BLUE STAR செட்டிகுப்பம் இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை சதீஷ் மற்றும் ப்ளூ ஸ்டார் கபடி குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

### வேலூரில்

## அசோக் ஹோம் பர்னிஷிங் ஷோரூம் திறப்பு விழா



வேலூர், ஜூன் 16
வேலூர் பெருமுகையில் அசோக் ஹோம் பர்னிஷிங் ஷோரூம் (வீட்டு உள் அலங்காரப் பொருட்கள்) திறப்பு விழா உரிமையாளர் பவர்லால் அசோக் ஆதர்ஷ் கவுரவ் கர்னாவட் தலைமையில் நடைபெற்றது.

வேலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். வினோத்கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். கவுரவ விருந்தினர்களாக ஜவரிலால் ஜெயின் (அம்பாலால் குரூப்ஸ்), பாபி பெனடிக்ட் (பி அண்ட் பி பில்டர்ஸ்) பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

இதில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இங்கு வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு , புதிய, பிரத்யேகமான அலங்காரப் பொருட்கள் வாடிக்கையாளர்கள் கனவுகளை நிறைவேற்றும் வகையில் தரமாக செய்து தரப்படும் என தெரிவித்துள்ளனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைச்சர் அருண்ராஜ் திடீர் ஆய்வு

## உணவுகள் தரமாக இல்லை என்று பெண் நோயாளி குற்றச்சாட்டு



ஈரோடு ஜூன் 16

பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்த மாணவ மாணவிகள் 100 பேருக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் வருவாய்த்துறை அமைச்சர் கே ஏ செங்கோட்டையன் கைத்தறிதுறை அமைச்சர் விஜய் பாலாஜி ஆகியோர் இதில் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி பேசினர். இதில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கந்தசாமி உட்படபலர்கலந்து கொண்டனர். இதை தொடர்ந்து பெருந்துறை மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் அமைச்சர் அருண்ராஜ் திடீர் என்று ஆய்வு செய்தார். அப்போது அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் அமைச்சர் அருண்ராஜ் குறைகளை கேட்டார் . அப்போது ஒரு பெண் நோயாளி ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் தரமானதாக இல்லை என்று கூறினார். இதை கேட்ட அமைச்சர் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறினார் ஈரோடு தலைமை அரசு ஆஸ்பத்திரியிலும் அமைச்சர் அருண்ராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது நோயாளிகள் சிகிச்சை பெறும் வார்டு பகுதியில் ஆய்வு நடத்தினார். அங்குள்ள கழிப்பறைக்கு சென்று பார்வையிட்ட அவர் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கண்காணிப்பு கேமராக்கள் சரியாக செயல்படுகிறதா நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறதாஎன்றும் அமைச்சர் அருண்ராஜ் கேட்டறிந்தார்.



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலக்ஸ், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் செவித்திறன் குறைபாடுடைய 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3,285/ வீதம் ரூ.9,855/மதிப்பிலான காதொலி கருவிகளை வழங்கினார்.

### தர்மபுரியில் அரசு, தனியார் பள்ளிகளில்

# அதிகளவில் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

## அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளையின் மாநில தலைவர் வழங்கினார்



தர்மபுரி ஜூன் 16

தர்மபுரியில் அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளை சார்பில் மாவட்ட அளவில் அரசு, தனியார் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு மற்றும் உயர் கல்வி படிக்கும் ஏழை, எளிய மாணவர்களுக்கும், ஆதரவற்ற உடல் நிலை பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நலத் திட்ட உதவிகள், ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சியானது அறக்கட்டளையின் தலைவர் எல்.அப்பாதுரை தலைமையில் கன்னிப்பட்டி பெரிய மாரியம்மன் கோவில் மண்டபத்தில் நடந்தது. தமிழ் தாய் வாழ்த்து பாடலுடன் துவங்கிய இந்த நிகழ்ச்சியில் கன்னிப்பட்டி மாரியம்மன் கோவிலில் சுமார் 2 லட்சம் மதிப்பில் அமைத்துக் கொடுத்த உணவு கூடத்தினை மாநிலத் தலைவர் அப்பாதுரை திறந்து வைத்தார். பின்னர் மாவட்டத் தலைவர் நாகமணி வரவேற்புரை ஆற்றினார். மேலும் மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம், மற்றும் மாநில துணை செயலாளர் சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் தர்மபுரி மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் கடந்தாண்டு 12 மற்றும் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தலா ஐந்து ஆயிரம், நான்கு ஆயிரம், மூன்று ஆயிரம், என பத்து பேருக்கு ஊக்க தொகையாகவும், கல்லூரில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவி தொகையுடன் கேடயம் வழங்கி பாராட்டினார். ஆதரவற்ற மற்றும் உடல் நலன் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தலா 3 ஆயிரம் மதிப்புள்ள ஊட்டச்சத்துக்களுடன் கூடிய உணவுப்பொருள் போன்றவற்றை மாநில தலைவர் அப்பாதுரை வழங்கி, பின்னர் பேசிய மாநில தலைவர், கன்னிப்பட்டி மாரியம்மன் கோவில் நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்று ஜெனரேட்டர் வழங்குவதாக உறுதியளித்தார். இந்த நிகழ்ச்சியின் முடிவில் தர்மபுரி மாவட்டம் துணை தலைவர் ஆனந்த் வரவேற்பு நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து நிர்வாகிகள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக, முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ்குமார் தலைமையில், அனைத்து அரசுதுறை அலுவலர்கள், பள்ளி மாணவிகள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன், மாவட்ட சமூக நல அலுவலர் .சக்தி சுபாசினி, உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக ரூ. 3.30 லட்சம் மோசடி

## போலீசார் வழக்குபதிவு

தென்தாமரைகுளம், ஜூன், 16

தென்தாமரைகுளம் அருகே உள்ள காட்டுவிளை பகுதியை சேர்ந்தவர் டென்னிஸ் (வயது 66). அரசு சாலை ஒப்பந்தக்காரரான இவரது இரண்டாவது மகன், பி.இ. படித்து விட்டு வேலை தேடிவந்துள்ளார். இந்நிலையில் அப்பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் மூலமாக, காப்பிக்காடு பகுதியை சேர்ந்த வினோ ரெக்ஸ் (48) என்பவர் டென்னிஸ் க்கு அறிமுகமாகியுள்ளார். அவர், டென்னிஸின் மகனுக்கு வெளிநாட்டில் வேலை வாங்கித்தருவதாக ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதனை நம்பிய டென்னிஸ் நேரடியாகவும்,வங்கி கணக்கு மூலமாக வினோ ரெக்ஸ் க்கு பல தவணைகளாக மொத்தம் 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயை கொடுத்துள்ளார் பணம் கொடுத்து பல மாதங்கள் ஆகியும் வினோ ரெக்ஸ் வேலை வாங்கி தரவில்லையாம். இதனால் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த டென்னிஸ், தனது பணத்தை திருப்பி தருமாறு கேட்டுள்ளார். அதற்கு வினோரெக்ஸ் முறையான பதில் அளிக்காமல் இழுத்தடித்து வந்துள்ளார். இதையடுத்து டென்னிஸ் தென்தாமரை குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வினோ ரெக்ஸ் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



### இரணியல் அருகே

# குளத்தில் குளிக்க சென்றவர் பிணமாக மீட்பு

இரணியல், ஜூன்.16

இரணியல் அருகே உள்ள இரணியல் கோணம் என்ற இடத்தை சேர்ந்தவர் ராஜேஷ்(40) டிரைவர் ஆக பணி புரிந்தார். இவருக்கு திருமணம் ஆகி ஷெரீன் (33) என்ற மனைவியும் இரண்டு மகன்களும் உள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக கணவன் மனைவி கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருப்பதாக தெரிகிறது. இதனால் ராஜேஷ் மது பழக்கத்திற்கு அடிமையானதாக கூறப்படுகிறது.

வீட்டுக்கு அருகே உள்ள வலியகுளத்திற்கு குளிக்க சென்றார். நீண்ட நேரம் ஆகி வீடு திரும்ப வில்லை. இதனால் தந்தை காளிதாஸ் குளத்தில் தேடி சென்று பார்த்த போது கரையில் செருப்பு துணிகள் மற்றும் சோப்பு இருந்த நிலையில் ராஜேஷ் மட்டும் காணாமல் போனதால் அதிர்ச்சி அடைந்தார். அக்கம் பக்கம் உறவினர்கள்நண்பர்கள்தேடிபலன்இல்லாதநிலையில் இது குறித்து திங்கள் நகர் தீயணைப்பு நிலையத்தில் தகவல் அளித்தனர்.நிலைய அலுவலர் ஜீவன் தலைமையில் நீண்ட நேரம் ஆகி பலன் இல்லாத நிலையில் இன்று காலை நீண்ட நேரம் கழித்து ராஜேஷ் பிணமாக மீட்கபட்டார். இது குறித்து காளிதாஸ் அளித்த புகாரின் பேரில் இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த குளத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அளவுக்கு அதிகமாக மண் அள்ளப்பட்டது இதனால் இந்த குளத்தில் இது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகிறது என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



### களியல் கோதையாற்றில்

# முதலை நடமாட்டம்: பீதியில் மக்கள்

மார்த்தாண்டம், ஜூன்.16

குமரி மாவட்டம் களியல் பகுதியில் உள்ள கோதையாற்றின் செங்குழிக்கரை என்னும் பகுதியில் முதலை நடமாட்டம் இருப்பதாக கடந்த 5 மாதங்கள் முன்பு தகவல் பரவியது. இதையடுத்து களியல் வனத்துறையினர் அந்த பகுதியில் ஆய்வு செய்து முதலை இருப்பதை கண்டறிந்தனர். தொடர்ந்து பொதுமக்களை அச்சுறுத்தும் முதலையை பிடிக்க ஆற்றில் கூண்டும் அமைத்தனர்.

நீண்ட நாட்கள் முதலையை பிடிக்க முயன்றும் அது கூண்டில் சிக்கவில்லை. இதையடுத்து முதலையை தேடும் பணி கைவிடப்பட்டது. இந்த நிலையில் காணாமல் போன முதலை 4 மாதங்களுக்கு பிறகு கடந்த சில தினங்களுக்கு முன்பு மீண்டும் அதே இடத்தில் தென்பட்டது. இந்த செய்தி உடனடியாக வெளியில் பரவி, வனத்துறையினர் ஆய்வு செய்தனர்.

இந்த நிலையில் நேற்று 15ம் தேதி காலை மீண்டும் பொதுமக்களுக்குமுதலைதனதுவிஸ்வரூபதரிசனத்தை அளித்துள்ளது. இதை ஏராளமான அப்பகுதி வாசிகள் கண்டு அதை படம் மற்றும் வீடியோ பிடித்துள்ளனர். இதனால் பீதி அடைந்துள்ள மக்கள் உயிர் பலி ஏற்படுவதற்கு முன்பு, அதிக மக்கள் பயன்படுத்தும் கோதையாற்றிலிருந்து முதலையைப் பிடித்து அகற்ற மாவட்ட வனத்துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



### கோவையில்

# கோவில் கும்பாபிஷேகத்திற்கு அமைச்சரை சந்தித்து அழைப்பு

கோவை ஜூன்:16

பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் மரியாதை நிமித்தமாக அருள்மிகு சித்தி விநாயகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவிலின் அறக்கட்டளையின் சார்பாக திருக்கோவிலுக்கு விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால் அதனை தாங்கள் முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் கொடுப்பதற்கு அனைத்து ஆன்மீகப் பணிகளையும்,சிறப்பான முறையில் செய்து கொடுக்க வேண்டி நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

திருக்கோவில் அறக்கட்டளை நிறுவனத் தலைவரும் கே ஆர் சிவதேசிகன் வேளாளர் பிள்ளை மற்றும் அகில இந்திய வேளாளர் வெள்ளாளர் பேரவையின் நிறுவனத்தலைவரும் அமைச்சரிடம் வருகின்ற தமிழ்நாடு அரசின் சட்டமன்ற கூட்டத்தொடரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு விரைவில் நடத்தி முடிக்க வேண்டும் என்றும்,மேலும் பிற்படுத்தபட்டோர் நலத் துறையின் உடைய மசோதா முன்னெடுப்பில் எங்களது வேளாளர் வெள்ளாளர் அமைப்புகளின் சார்பாககொடுக்கஇருக்கின்றகோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்ய வேண்டி எங்களது கோரிக்கை மனுவை பேரவையில் உள்ள அனைத்து அமைப்புகளும் நேரில் சந்திக்க உள்ளோம் என்று கூறினர். உடன் கோவை வடவள்ளி திருவாளர்கள் வேளாளர் பிள்ளை அறக்கட்டளை,இணைந்த வடவள்ளி வேளாளர் பிள்ளை நல சங்கத்தின் பொருளாளருமான B சிவகுமார்பிள்ளை உடன் இருந்தனர்.

### இலவச வீட்டுமனை பட்டாக்களில் ஆதிக்க சாதியினரின் அத்துமீறல்

# காவேரிப்பட்டினத்தில் கருப்புக்கொடி ஏந்தி காத்திருப்பு போராட்டம்



காவேரிப்பட்டினம், ஜூன் 16

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே உள்ள காந்திநகர் ஆதிதிராவிடர் மக்களுக்கு பண்ணிஅள்ளி கிராமத்தில் தமிழ்நாடு அரசால் ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டா நிலங்களில் அமைக்கப்பட்டிருந்த சர்வே எல்லைக் கற்களை ஆதிக்க சாதியினரைச் சேர்ந்த சிலர் பிடுங்கி வீசி அராஜகத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த சம்பவத்தை கண்டித்தும், பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க காவல்துறை தவறிவிட்டதாக குற்றம்சாட்டியும், பட்டா நிலங்களை முறையாக ஒப்படைக்காமல் அலைக்கழித்து வரும் வருவாய் துறையை கண்டித்தும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் காந்திநகரில் கருப்புக்கொடி ஏந்திய காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

அம்பேத்கர் சிலை முன்பு நடைபெற்ற இந்த போராட்டத்திற்கு முன்னாள் ஒன்றிய செயலாளர் ராஜேஷ் தலைமை தாங்கினார். மாநில தொண்டர் அணி செயலாளர் ஆ. மாதேஷ் சிறப்புரையாற்றி, ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசு பட்டா நிலங்களில் ஆதிக்க சாதியினரின் தலையீடு மற்றும் அத்துமீறல்களை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம்சாட்டினார்.

மேலும், இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த போராட்டத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட காந்திநகர் ஆதிதிராவிடர் காலனி மக்கள் கருப்புக்கொடி ஏந்தி கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதில் மத்தூர் ஒன்றிய செயலாளர் சூலக்கரை மூர்த்தி, வர்த்தக அணி மாநில துணைச்செயலாளர் கோபி, கிருஷ்ணகிரி ஒன்றிய செயலாளர் ஆளப்பட்டி ரமேஷ், கிறிஸ்துவ பேரவை மாநில துணைச் செயலாளர் சார்லஸ், பலராமன், மூர்த்தி, மகளிர் அணி துணைச் செயலாளர் செல்வி, பெருமாள், ஏழுமலை, முருகன், அனிதா, சாந்தி, சந்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் பேசியவர்கள், தமிழ்நாடு அரசு உடனடியாக இந்த பிரச்சினையில் தலையிட்டு ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டா நிலங்களை முழுமையாக ஒப்படைப்பதுடன், சர்வே கற்களை பிடுங்கி சேதப்படுத்தியவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# தொப்பூர் கணவாயில் உயர்மட்ட மேம்பால பணி: ஆட்சியர் நேரில் ஆய்வு





தருமபுரி ஜூன் 16

தருமபுரி மாவட்டம் தொப்பூர் கணவாய் பகுதியில் தொடர் விபத்துக்களை தடுக்கவும், போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் ரூ. 905 கோடி மதிப்பீட்டில் தொப்பூர் கணவாய் பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த கணவாய் பகுதியின் சாலைகளை அகலப்படுத்தி சீரமைக்கும் பணியையும்தீவிரமாகநடைபெற்றுவருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உயர்மட்ட மேம்பாலம் பகுதி தொடங்கும் இடம் கட்டைமேடு, ஆஞ்சநேயர் கோயில், சிறிய சுரங்கப்பாதை அமைவிடம், அதிக விபத்துக்கள் நடக்கும் இரட்டைப்பாலம், எலிவேட்டட்காரிடாரின் முடிவு ஆகிய இடங்களையும் ஆய்வு செய்தார். இந்தப் பணிகள் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாத வகையில் மேற்கொள்ள வேண்டும். கனரக வாகனங்கள் ஒரு வழியாகவும் , இலகு வாகனங்கள் ஒரு வழியாகவும் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது திட்ட செயலாக்க அழகு திட்ட இயக்குனர் சீனிவாசலு, மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம், துணை காவல் ஆய்வாளர் சிவராமன், உதவி ஆட்சியர் காயத்ரி, வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெயதேவ் ராஜ் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## குமரி அரசு மருத்துவ கல்லூரியில்

# உலக இரத்த கொடையாளர் தின விழா; கலெக்டர் பங்கேற்பு



நாகர்கோவில், ஜூன். 16

ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று உலக இரத்த கொடையாளர் தின விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்து கொண்டு, அதிக முறை இரத்தம் தானம் செய்தவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

உலகம் முழுவதும் ஜூன் 14ம் தேதி உலக இரத்த கொடையாளர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக இன்று வருடத்திற்கு 3 முறை மற்றும் அதற்கு மேல் இரத்த தானம் வழங்கிய கொடையாளர்களுக்கான பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், ஆசாரிப்பள்ளம்அரசுமருத்துவக்கல்லூரிமாணவ மாணவியர்கள் உள்ளிட்டோர் பாராட்டு சான்றிதழ் வழங்குவதில் பெருமை அடைகிறேன். குமரி மாவட்டத்தில் அதிக அளவில் இரத்த கொடையாளர்கள் உள்ளார்கள். குறிப்பாக கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பல்வேறு தரப்பட்ட மக்கள் தானாக முன்வந்து இரத்தம் வழங்கி வருகிறார்கள்.

அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணி பெண்களுக்கும் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அறுவை சிகிச்சையின் போதும் அதிக அளவு இரத்தம் தேவைப்படுகிறது. இரத்த வங்கிகளில்தேவையானஇரத்தத்தினைஇருப்பு வைத்து கொள்ள மருத்துவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதிக அளவு இரத்தம் தேவைப்படும் நேரங்களில் இரத்த கொடையாளர்கள், தன்னார்வலர்கள், கல்லூரி மாணவ மாணவியர்களிடம் பெற்று உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க வேண்டும். இரத்த கொடையாளர்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து இரத்தம் வழங்குவதன் மூலம் பல உயிர்களை காப்பாற்ற முடியும். எனவே பொதுமக்கள் தன்னார்வமாக இரத்த தானம் செய்திட முன்வர வேண்டும். என கூறினார்.

நடைபெற்ற விழாவில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், மருத்துவ கண்காணிப்பாளர் மரு. கிங்ஸ்லி ஜெப சிங், துணை முதல்வர். மரு.கீதா ராணி, உறைவிட மருத்துவர் மரு.விஜயலட்சுமி, உதவி உறைவிட மருத்துவர் மரு.ரெனிமோள், மரு. கலைக்குமார், இரத்த வங்கி மருத்துவர் மரு.ராகேஷ், துறை அலுவலர்கள், பொதுமக்கள், இரத்த கொடையாளர்கள், கல்லூரி மாணவ மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



## தருமபுரியில்

# பாஜக மாநில துணைத்தலைவர் வெங்கடேசன் செய்தியாளர்கள் சந்திப்பு

தருமபுரி ஜூன் 16

தருமபுரி மாவட்ட பாஜக தலைமை அலுவலகத்தில் பாரத பிரதமர் நரேந்திர மோடி நல்லாட்சியில் நடைபெற்ற சாதனைகள் விளக்க கூட்டம் மாவட்ட தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக பாஜக மாநிலதுணைத்தலைவர்வெங்கடேசன் கலந்து கொண்டு செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது: பாரத பிரதமர் நரேந்திர மோடி ஆட்சி பொறுப்பேற்று12வருடங்களைநிறைவு செய்திருக்கிறார்.

இந்தியாவில் நேரு, இந்திராகாந்தியை விட 4,400 நாட்கள் அதிகபடியாக ஆட்சி செய்து சாதனை படைத்து மிகப் பெரும் வல்லமை மிக்க பிரதமராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

முக்கியமாக சமூக நீதி துறையில் அதிக சாதனை படைத்துள்ளார். இதுவரை இல்லாத அளவிற்க்கு சமூக நீதி துறையில் தலித் சமுகத்தில் யாரும் வழங்காத கேபினட் உட்பட 12 பேருக்கு அமைச்சர்களாக பதவி வழங்கி உள்ளார். இதற்கு முன் இருந்த காங்கிரஸ் ஆட்சியில் தலித் மக்களுக்கும், பழங்குடி இன மக்களுக்கும் எந்த அரசியல் அதிகாரமும் வழங்கவில்லை, சட்டத்துறையில் அம்பேத்கருக்கு அடுத்து பழங்குடியின சமூகத்திற்க்கு சட்ட அமைச்சராக வாய்ப்பு வழங்கியவர் மோடி , அம்பேத்கர் பிறந்த இடத்தை நினைவு சின்னமாக மாற்றி அம்பேத்கருக்கு புகழை சேர்த்தவர் மோடி , பெண்கள் சமூக ரீதியாக பின் தங்கி இருந்தார்கள் அவர்களும், அரசியல் அதிகாரம் பெற வேண்டும் என எண்ணி பெண்களுக்காக 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி உள்ளார்.

அது விரைவில் சட்டமாக வரும், கிராமப்புற மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க ஜல்ஜீவன் திட்டத்தையும், விறகு அடுப்பில் கஷ்டப்பட்ட தாய்மார்களின் துயரத்தை போக்க உஜ்வால திட்டத்தின் மூலம் இலவச கேஸ் சிலிண்டர் வழங்கியவர் மோடி இது போன்ற எண்ணற்ற திட்டங்களை வழங்கியவர் மோடி என தெரிவித்தார்.



தருமபுரி அடுத்த அன்னசாகரத்தில் உள்ள அருள்மிகு ஶ்ரீ அரசமரத்தடி அங்காளம்மன் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூலவர் அங்காளம்மனுக்கு புதியதாக செய்யப்பட்ட முழு வெள்ளிக்கவசத்தை வாணியம்பாடி வீட்டு வகையறா மற்றும் அரசமரத்தடி அங்காளம்மன் இளைஞர் அணி சார்பில் அணிவித்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.

# உலக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு விழிப்புணர்வு உறுதிமொழி; கலெக்டர் பங்கேற்பு




நாகர்கோவில், ஜூன்.16

உலக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு விழிப்புணர்வு தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 15ம் தேதி உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. முதியவர்களுக்கு எதிராக நிகழும் உடல் ரீதியான, மன ரீதியான மற்றும் நிதி ரீதியானவன்கொடுமைகளைத்தடுப்பதும், அவர்களுக்குப் பாதுகாப்பான, கண்ணியமான வாழ்வை உறுதி செய்வதும் இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதன்ஒருபகுதியாக இன்று மாவட்ட சமூகநலத்துறையின் சார்பில் உலக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி குமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார்.

முதியோர்களை முதியோர் இல்லங்களில் சேர்பதை தவிர்த்து, அவர்களுக்கென அங்கீகாரம் வழங்கி, அவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப், தலைமையில் உலக முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தின கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து, அவர்கையெழுத்திட்டார்.நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, மாவட்ட சமூகநல அலுவலர் விஜயமீனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் கு.சுகிதா (பொது), பத்மபிரியா (நிலம்), மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் சகிலா பானு, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## கந்திலி அடுத்த செவ்வாத்தூர் புதூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில்

# குண்டும் குழியுமாக உள்ள சாலை சீரமைத்து புதிய சாலை அமைக்க மாவட்ட ஆட்சியரிடம் சமூக ஆர்வலர் கோரிக்கை



திருப்பத்தூர்:ஜூன்:16

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட செவ்வாத்தூர் புதூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் பல ஆண்டுகளாக சாலை அமைக்காமல் குண்டும் குழியுமாக காட்சி அளிக்கிறது. இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். பல முறை அப்பகுதியின் சமூக ஆர்வலர் மூர்த்தி அப்போது இருந்த மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்த நிலையில், உடனடியாக தீர்வு கண்டு சாலை வசதி செய்து தருவதாக உறுதி அளித்திருந்தார். கந்திலி வட்டார வளர்ச்சி அலுவலரும் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று சாலை அமைக்க அளவீடு செய்த நிலையில் தற்போது வரை அந்த சாலை சீரமைக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அதோடு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சாலை அமைத்ததாகவும் இது வரையிலும் யாரும் கண்டுக்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மேலும் மழைக்காலங்களில் குண்டும் குழியுமாக உள்ள அந்த சாலையில் தண்ணீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கிறது. சமூக ஆரவலர் மூர்த்தி என்பவர் அளித்த மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார். மேலும் சமூக ஆர்வலர் ஏற்கனவே அப்பகுதியில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், சுடுகாட்டிற்கு இடம், நியாய விலைக் கடை வருவதற்கு இவரது பங்களிப்பு இருந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பணம் இரட்டிப்பு மோசடி

# குமரி வாலிபரிடம் ரூ 5 லட்சம் பறிப்பு

## பெண் உட்பட 3 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூன். 16

குலசேகரம் பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ் (30). மர வேலை செய்து வருகிறார். இவரது நண்பர் ஜெபின்ராஜ் (35) மூலம் நாங்குநேரி பகுதியை சேர்ந்த சேர்மதுரை (39) என்பவர் பிரகாசுக்கு அறிமுகமானார். அப்போது சேர்மதுரை தனது நண்பர் ராம்குமார் என்பவர் அம்பாசமுத்திரம் பகுதியில் இருப்பதாகவும் அவரிடம் பணம் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் பெறலாம் என கூறியுள்ளார்.

இதை நம்பி கடந்த 4 நாட்களுக்கு முன் 5 லட்சம் பணத்துடன் பிரகாஷ் அம்பாசமுத்திரம் சென்றுள்ளார். அங்கு ராம்குமார் என்பவர் வந்து பைக்கில் அவரை அழைத்துச் சென்றார். அங்குள்ள ஒரு கட்டிடத்திற்குள் பிரகாசை அழைத்து சென்றனர். அங்கு சென்ற பின் கள்ள நோட்டு தொழில் நடப்பதை தெரிந்த பிரகாஷ் தனக்கு இந்த தொழில் வேண்டாம் என்று கூறி 5 லட்சம் பணத்துடன் அங்கு இருந்து புறப்பட முயன்றுள்ளார். அப்போது அங்கிருந்தவர்கள் பிரகாஷை தாக்கி அவரிடம் இருந்த ரூ. 5 லட்சத்தை பறித்து விட்டு வெளியே கூறினால் கொலை செய்து விடுவோம் என கூறி மிரட்டி அனுப்பியுள்ளனர்.

இதை அடுத்து பணத்தை இழந்த பிரகாஷ் அங்கிருந்து நாகர்கோவில் வந்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். வடசேரி போலீசார் ஜீரோ வழக்கு பதிவு செய்து, சம்பவம் அம்பாசமுத்திரத்தில் நடந்துள்ளதால், அம்பாசமுத்திரம் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். தற்போது சேர்ம துரை, ராம்குமார், கீர்த்தி (37) ஆகிய 3 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே ரூ 5 லட்சம் பணத்தை இழந்த பிரகாஷ் தனதுநண்பர்ஜெபின்பராஜிடம்கூறினார்.இதையடுத்து அவர்கள் ஆலோசித்து சேர்ம துரையை தனியாக வரவழைக்க திட்டமிட்டுள்ளனர். அதன்படி மேலும் ரூ. 50,000 அரசியல் பிரமுகர் ஒருவர் தருவதாகவும் அந்தபணத்தைவாங்கிவாங்கவருமாறுசேர்மதுரையை நாகர்கோவிலுக்கு அழைத்துள்ளனர். அங்கு வந்த சேர்மதுரையை சுங்கான்கடை பகுதிக்கு கொண்டு சென்று தாக்கியுள்ள தாக்கினர். பின்னர் அவரது மனைவிக்கு போன் செய்து கணவரை கடத்தி உள்ளதாகவும் உடனடியாக ரூ. 5 லட்சம் வேண்டும் என்று கூறியுள்ளனர். அவர் நாங்குநேரி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். உடனடியாக போலீசாரின்யோசனைப்படி நாங்குநேரி போலீசார்நாகர்கோவில்வந்துசுங்கான்கடைபகுதியில் வைத்து பணத்தை கொடுக்கும் போது பிரகாஷ் உள்ளிட்ட 2 பேரை போலீசார் பிடித்தனர். அதன் பிறகு தான் இந்த மோசடிகள் தொடர்பான மொத்த விவரம் போலீசாருக்குதெரியவந்துள்ளது.தற்போதுநாங்குநேரி போலீசார் பிரகாஷ் மற்றும் ஜெபின் ராஜ் மீது ஜீரோ எஃப் ஐ ஆர் வழக்கு பதிவு செய்து வடசேரி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.



# பெரம்பலூர் அருகே கார் மீது லாரி மோதி 3 பேர் பலி

பெரம்பலூர், ஜூன் 16

பெரம்பலூர் மாவட்டம் டி.களத்தூர் பிரிவு பகுதியில், கார் மீது லாரி மோதிய கோர விபத்தில் மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

முதற்கட்ட விசாரணையில் உயிரிழந்தவர்கள் இரண்டு பேர் சென்னை பெரம்பூரை சேர்ந்த சங்கர் (37) மற்றும் அரியலூர் மாவட்டம் சன்னாசிநல்லூரை சேர்ந்த விஜய் (30) என தெரியவந்துள்ளது.

மேலும், தற்போது விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி மேயர் (பொ) ரா. பாலசுப்பிரமணியம் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் ஆகியோர் முன்னிலையில் இன்று (15.06.2026) மைய அலுவலகத்தில் வளர்ச்சிதிட்டப்பணிகள்,குடிநீர்மற்றும்சுகாதாரம்குறித்துஆய்வுகூட்டம்நடைபெற்றது. உடன்துணைஆணையாளர்கள்சுந்தரராஜன்,செந்தில்முருகன்,மாநகராட்சிஅலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## திருச்சி

# வேனுக்கு அடியில் சிக்கிய வாலிபர் உடல் நசுங்கி பலி



திருச்சி, ஜூன் 16

திருச்சி மாவட்டம் அல்லித்துறை அருகே அதவத்தூர் பகுதியைச் சேர்ந்த நந்தகுமார், நண்பர் நாகராஜுடன் இருசக்கர வாகனத்தில் வயலூர் சாலையில் சென்று கொண்டிருந்தார். அப்போது, எதிரே வந்த வேன் மீது பைக் மோதி விபத்துக்குள்ளானது. இதில், வேனுக்கு அடியில் சிக்கிய இருவரும் சுமார் 20 மீட்டர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இந்த விபத்தில் நந்தகுமார் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தார். படுகாயமடைந்த நாகராஜ் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



### தஞ்சாவூரில்

# பெரியார் படிப்பகம், தலைவர் வீரமணி நூலக 19 ஆண்டு விழா

தஞ்சாவூர் ஜூன்16

தஞ்சாவூர் பூபதி நினைவு பெரியார் படிப்பகம் தமிழக தலைவர் வீரமணி நூலகம் 19வது ஆண்டு விழா நடைபெற்றது விழாவில் முன்னாள் எம்எல்ஏயும் மாநில மருத்துவரணி செயலாளர் எழிலன் சிறப்புரையாற்றினர்

நிகழ்வில்தஞ்சாவூர்மத்திய மாவட்ட திமுக செயலாளர் துரை சந்திரசேகரன் எம் எல் ஏ,முரசொலி எம்பி,துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி முன்னாள் மேயரும் தி.மு.க மாநகரசெயலர் சண். ராமநாதன் ,முன்னாள் எம்எல்ஏ டி.கே.ஜி நீலமேகம்,செயற்குழு உறுப்பினர் செல்வம் மற்றும்கழக நிர்வாகிகள் மற்றும்பலர் கலந்து கொண்டனர்




# தஞ்சாவூரில் சேகுவேரா பிறந்தநாள் விழா

தஞ்சாவூர் ஜூன் 16

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உலகப் புரட்சியின் அடையாளமாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் விளங்கிய புரட்சியாளர் சேகுவேரா வின்98 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

விழாவிற்கு கட்சியின் மாநகர செயலாளர் வடிவேலன் தலைமை வகித்தார். சேகுவேரா உருவபடத்து க்கு செவ்வணக்க மலரஞ்சலி செலுத்தப்பட்டது

மாவட்ட செயலர் சின்னை. பாண்டியன், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநில பொருளாளர் சந்துரு சிறப்புரையாற்றினார்

விழாவில் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், அருளரசன், சரவணன், மாவட்ட குழு உறுப்பினர் கள் குருசாமி ,வசந்தி, மாநகர உறுப்பினர்கள் சத்தியநாதன், ராஜன், கோஸ் கனி ,அர்ஜுன்,தர்மா ராஜன், சி ஐ டி யு மாவட்ட துணை செயலாளர் அன்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# தஞ்சாவூர் மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ரேவதி தலைமையில் நடந்தது

தஞ்சாவூர் ஜூன் 16

தஞ்சாவூர் மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை ,குடும்ப அட்டை, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 522 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டரிடம் வழங்கினார்கள். மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் ரேவதி உத்தரவிட்டார்

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், உதவிய கலெக்டர் (பயிற்சி) சுபாஷ் கார்த்திக் ,சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் சௌமியா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி



தஞ்சாவூர்ஜூன் 16

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் முதியோர் கொடுஞ்செயல்எதிர்ப்பு உறுதி மொழியை மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் உறுதி மொழி ஏற்றனர்

முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி இந்தியா குடிமகன் /குடிமகளாகிய நான் முதியோர்களை குடும்பத்தில் நல்ல முறையில் அரவணைப்போடு பராமரித்திடுவேன் எனவும், மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் காயப்படுத்தும் தகாத வார்த்தை களை உபயோகிக்க மாட்டேன் எனவும் ,அவர்களை உணர்வுகளுக் கு மதிப்பளிப்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.பொது இடங்களான மருத்துவமனை, வங்கி, பேருந்து போன்ற இடங்களில் முதியோர்களு க்கு முன்னுரிமை அளித்து அவர்க ளுக்கு எதிரான கொடுஞ்செயல்கள் வன்முறைகள் எவ்விதத்திலும் இழைக்கப்படுவதினை தடுத்துட பாடுபடுவேன் என உளமாற உறுதி கூறுகிறேன் ,என மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் உறுதி மொழியை ஏற்றனர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், உதவி கலெக்டர் பயிற்சி சுபாஷ் கார்த்திக்,மாவட்ட சமூக அலுவலர் திருமதி லதா மற்றும்அரசு அலுவல ர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

### திருச்சி அருகே

# பைக் விபத்து கணவன் பலி: மனைவி படுகாயம்

திருச்சி, ஜூன் 16

மண்ணச்சநல்லூர் அருகே சோழங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த ராஜாங்கம், தனது மனைவி ராசாத்தியுடன் கடந்த 6ம் தேதி துடையூர் அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது சாலையோர தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானார். இதில் பலத்த காயமடைந்த இருவரும் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். சிகிச்சை பலனின்றி ராஜாங்கம் நேற்று உயிரிழந்தார். இதுகுறித்து வாத்தாலை போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்



# 100 அடி ஆழமான நெய்யாறு இடதுக்கரை கால்வாய் கரை வழியாக செல்லும் சாலை பக்க சுவர் சேதம்

## ஆதிதிராவிடர் மக்கள் அவதி

களியக்காவிளை, ஜூன்.16

களியக்காவிளை அருகே வன்னியூர் ஊராட்சிக்குட்பட்ட மேக்கோடு குறவன்விளை சாலை உள்ளது. சாலை முடியும் இடத்தில் 150 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்பு காலனி உள்ளது. இந்த சாலை நெய்யாறு இடதுகரை கால்வாய் கரையோரமாக அமைந்துள்ளது. இந்த சாலை அமைக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு முன்பு செப்பனிடப்பட்டது. அதன் பிறகு இதுநாள் வரை எந்த பராமரிப்பும் இல்லாமல் பழுதடைந்தது. குறிப்பாக கால்வாயின் பக்க சுவர் ஆங்காங்கே இடிந்து மண் சரிவு ஏற்பட்டு அடிக்கடி வாகனங்கள் கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது.

சுமார் நூறு அடிக்கும் மேல் ஆழமான கால்வாய் கரையோரம் உள்ள இந்த சாலை நடந்து கூட செல்ல முடியாத அளவுக்கு ஆபத்தான நிலையில் உள்ளது. இவ்வழியாக இப்பகுதியில் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் சுமார் 4 கிலோமீட்டர் தூரம் நடந்தே செல்லவேண்டிய நிலை தொடர்கிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர், முதலமைச்சர் தனிப்பிரிவு அலுவலகம் , பொதுப்பணி துறை அதிகாரிகளுக்கும் பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என இப்பகுதி மக்கள் வேதனை தெரிவித்தனர்.

எனவே பெரும் உயிர் பாதிப்புகள் ஏற்படும் முன்னே இந்த பகுதியில் கால்வாய் பக்க சுவர்களை சீரமைந்து சாலையை செப்பனிட்டு தர தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மார்த்தாண்டம் மேம்பாலத்தில்

# நள்ளிரவில் கார்-பைக் மோதல்; வாலிபர் உயிரிழப்பு



மார்த்தாண்டம், ஜூன். 16

களியக்காவிளை அருகே படர்ந்தாலுமூடு பகுதியை சேர்ந்தவர் சுகுமாரன் மகன் சுரேஷ்குமார் (26). டிப்ளமோ படித்து விட்டு கேட்டரிங் வேலைக்கு சென்று வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சுரேஷ்குமார் தக்கலை அருகே அழகியமண்டபம் பகுதியில் நடந்த தனது நண்பர் பிறந்த நாள் விழாவில் பங்கேற்பதற்காக பைக்கில் சென்றார். பின்னர் விழா முடிந்ததும் பைக்கில் ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்

நள்ளிரவு சுமார் 11.45 மணியளவில் மார்த்தாண்டம் மேம்பாலத்தில் வந்த போது பெங்களூருவில் இருந்து திருவனந்தபுரம் நோக்கி கார்களை ஏற்றிக்கொண்டு நீண்ட நீளமான லாரி ஒன்று முன்னால் சென்று கொண்டிருந்தது.

அப்போது சுரேஷ்குமார் லாரியை செல்ல முயன்றபோது, எதிர் திசையில் கொல்லத்திலிருந்து கன்னியாகுமரி நோக்கி வந்த கார் மீது பைக் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் சுரேஷ்குமார் கீழே விழுந்து லாரி அடியில் சிக்கிக்கொண்டார். அந்த நேரம் லாரி சக்கரம் ஏறி இறங்கியதில் சுரேஷ்குமார் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த அந்த வழியாக வந்தவர்கள் மார்த்தாண்டம் போலீசருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று சுரேஷ்குமார்உடலைநீட்டுபிரேதபரிசோதனைக்காக குழித்துறை அரசு மருத்துவமனை அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குபதிவுசெய்துவிசாரணைநடத்திவருகின்றனர். பிறந்தநாள் விழாவுக்கு சென்று விட்டு வந்த வாலிபர் விபத்தில் சிக்கி பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# உதவித்தொகை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி!!



திருப்பூர்: ஜூன் 16

இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும், திருப்பூர் மண்டல அலுவலகத்தின் ஆணையாளர்அபிஷேக் ரஞ்சன் சேம நிதி அமைப்பு (EPF), பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஜ்கார் யோஜனா (PMV BRY) திட்டத்தின் கீழ், ஜூன் 19 ஆம் தேதி மாலை 4:00 மணி முதல் திருப்பூர், காந்தி நகரில் உள்ள AVP சீனியர் பள்ளியில் உதவித்தொகை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யும்.

இந்த நிகழ்ச்சி, புது தில்லியில் உள்ள விக்யான் பவனில் பிரதமர் தலைமையில் நடைபெறும் ஒரு மைய நிகழ்விற்கான நாடு தழுவிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும். இதைத் தொடர்ந்து, திருப்பூர் உட்பட நாடு முழுவதும் 200 இடங்களில் உள்ளூர் நிகழ்வுகளும் நடைபெறும். தேசிய நிகழ்ச்சியின் நடவடிக்கைகள், உள்ளூர் நிகழ்வின் போது நேரலையாக ஒளிபரப்பப்படும். இந்த நிகழ்ச்சியின் போது, பிரதம மந்திரி வாகனப் பட்டுவாடா திட்டத்தின் கீழ் உள்ள பலன்கள் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய அம்சங்கள் குறித்த தகவல்களை அதிகாரிகள், வேலையளிப்பவர்கள், பணியாளர்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு வழங்குவார்கள்.

இந்த முன்னெடுப்பின் நோக்கம், பிரதம மந்திரி தொழிலாளர் நலத் திட்டம் (PMVBRY) குறித்து அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், முறைசார் வேலைவாய்ப்பில் பரவலான பங்கேற்பை ஊக்குவிப்பதும் ஆகும். இதன் மூலம் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வலுப்படுத்தி, நாடு முழுவதும் வேலைவாய்ப்பை உருவாக்குவதை மேம்படுத்துவதே ஆகும்.

உள்ளூர் பிரமுகர்கள், முதலாளிகள் சங்கங்களின் பிரதிநிதிகள், ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள் என எதிர்பா ர்க்கப்படுகிறது. இந்திய அரசின் முதன்மை வேலைவாய்ப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பங்களிக்குமாறு EPFO அழைப்பு விடுத்து ள்ளது. என செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்..

# நாகர்கோவிலில் இருந்து ரயிலில் சென்ற கல்லூரி மாணவி மாயம்

## திருவட்டாறு போலீசில் பெற்றோர் புகார்



திருவட்டாறு, ஜூன். 16

திருவட்டாறு அருகே உள்ள பூவன்கோடு பகுதியை சேர்ந்தவர் ஜெயா என்பவர் மகள் ஜென்சிலின் (19). சென்னையில் ஒரு தனியார் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். விடுதியில் தங்கி படித்து வந்த இவர் விடுமுறையில் தற்போது ஊருக்கு வந்தார்.

நேற்று முன்தினம் ஜென்சிலின் நாகர்கோவில் இருந்து ரயிலில் சென்னைக்கு புறப்பட்டு சென்றுள்ளார். ரயிலில் ஏறியதும் வீட்டிற்கு தகவல் கொடுத்தவர், அதன் பிறகு பேசவில்லை. பெற்றோர் தொடர்பு கொண்ட போது செல்போன் சுவிட்ச் ஆப் ஆக இருந்துள்ளது. அடுத்த நாள் காரை கல்லூரிக்கு சென்று இருப்பதாக கருதி அவர்கள் கல்லூரியை தொடர்பு கொண்டனர். அப்போது ஜென்சிலின் கல்லூரிக்கு வரவில்லை என தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் சென்னையில் உள்ள மகளின் தோழிகள் மற்றும் உறவினர்கள்வீடுகளில் தேடினர். இருப்பினும் தகவல் கிடைக்கவில்லை. தொடர்ந்து இது குறித்து தந்தை ஜெயா திருவட்டார் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான ஜென்சிலினை தேடி வருகின்றனர்.

### நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில்

# ஊழியரை கடித்து குதறிய தெரு நாய்; மாநகராட்சி பணியாளர்கள் அதிரடி வேட்டை



நாகர்கோவில் ஜூன் 16

குமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் கடந்த சில வாரங்களாகவே தெருநாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள், வாகன ஓட்டிகள் மற்றும் பள்ளிச் செல்லும் குழந்தைகள் கடும் அச்சத்திற்கு ஆளாகியுள்ளனர். வடசேரி பஸ் நிலையம், அண்ணா பஸ் நிலையம், நாகர்கோவில் சந்திப்பு ரெயில் நிலையம் ஆகிய இடங்களில் நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளது.

சாலையில் செல்லும் இருசக்கர வாகனங்களை நாய்கள் துரத்துவதால் நிலை தடுமாறி விழுந்து காயமடைபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது. இது குறித்து மாநகராட்சி கவுன்சிலர்கள் கூட்டத்தில், நாய்களைப் பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்து அதிகாரிகளிடம் வலியுறுத்தி வந்தனர். மாநகராட்சி நிர்வாகம் அவ்வப்போது நாய்களைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தாலும், இந்நடவடிக்கை போதிய பலனைத் தரவில்லை என்றே கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று நாகர்கோவிலில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்திற்குள் சுற்றித் திரிந்த நாய் ஒன்று, அங்கு பணிபுரியும் தற்காலிக ஊழியர் ஒருவரை திடீரென பாய்ந்து கடித்துக் குதறியது. வலியால் அவர் அலறித் துடித்தார். அவரது கூச்சலைக் கேட்டு சுற்றியிருந்த பொதுமக்களும், சக ஊழியர்களும் ஓடிவந்து நாயை விரட்டினர். இதனால் நாய் அங்கிருந்து ஓடிவிட்டது.

இதைத் தொடர்ந்து காயமடைந்த அந்தத் ஊழியரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டு, சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு அவசரப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கலெக்டர் அலுவலகத்திற்குள் ஊழியரை நாய் கடித்த தகவல் காட்டுத்தீ போல பரவியதை அடுத்து, மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துவந்தனர். மனுக்கள்கொடுக்க வந்த பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவியதால், உடனடியாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள், கலெக்டர் அலுவலக வளாகத்திற்குள் சுற்றித் திரிந்த நாய்களை வலைவீசிப் பிடித்து அப்புறப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.